# டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்

## இலங்கையில் பாதுகாப்பான மற்றும் சமமான டிஜிட்டல் அணுகலுக்கான கொள்கைப் பரிந்துரைகள்



இவ் வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டதாகும். இவ் வெளியீட்டின் உள்ளடக்கங்களுக்கு கிறிசலிஸ் மற்றும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) ஆகியோர் மட்டுமே முழுப்பொறுப்புடையவர்கள். அத்துடன், இவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

Funded by the European Union

Implemented by:

Chrysalis Catalyzing change

LAW & SOCIETY TRUST

## நிருவாகச் சுருக்கம்

வட மாகாணத்திலுள்ள பெண்கள், சிறுமிகள் மற்றும் பால்நிலை சிறுபான்னையினர் டிஜிட்டல் தளங்களில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதைத் தடுக்கும் கட்டமைப்பு மற்றும் சமூகத் தடைகளை எதிர் நோக்குகின்றனர். இந்த கொள்கை விளக்க குறிப்பானது கிறிசலிஸ் (Chrysalis) மற்றும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை(LST) நிறுவனம் இணைந்து முன்னெடுத்த BRIDGE திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்ட ஏழு கவனக் குழு (FGDs) கலந்துரையாடல்களின் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது.

குறைவான டிஜிட்டல் உட்கட்டமைப்பு, கட்டுப்பாடான சட்டங்கள், ஆணாதிக்க விதிமுறைகள், குறைந்த டிஜிட்டல் அறிவு, இணையப் பாதுகாப்பு அபாயங்கள், மற்றும் இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறை (OGBV) உள்ளிட்ட முக்கிய தடைகளை இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் அடையாளப்படுத்துகின்றன. இச் சவால்கள் வட பிராந்தியத்தின் போருக்குப் பின்னரான சூழல் மற்றும் பாலினம், இனம், மதம் மற்றும் வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையிலான குறுக்கு வெட்டு சமத்துவமின்மைகளால் (Intersecting inequalities) வடிவமைக்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் பாதுகாப்பான, சமமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் அணுகலை உறுதி செய்ய இலக்காகக் கொண்ட, பாலின உணர்வுள்ள கொள்கை நடவடிக்கைகளிற்கு இந்த ஆவணம் வலியுறுத்துகின்றது

## ஆய்வு முறை Methodology

இந்த கொள்கை விளக்கக் குறிப்பானது 2024 ஏப்ரல் 16 முதல் 19 வரை **BRIDGE** திட்டத்திள் கீழ் சேகரிக்கப் பட்ட முதன்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் ஏழு கவனக் குழு **(FGDs)** கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இதில் ஊடகவியலாளர்கள், சமூக ஊடகத்தில் ஆதிக்கம் செலுத் துபவர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் உட்பட 8 முதல் 10 வரையிலான பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு குழுவிலும் இடம்பெற்றனர். பங்கேற்பு மற்றும் ஈடுபாடு, பிரதிநிதித்துவம் மற்றும் அடையாளம், சமூக விதி முறைகள் மற்றும் இணைய கலாசாரம், குறுக்குவெட்டுப் பிரச்சனைகள், பாதுகாப்பு மற்றும் காவல், மற்றும் தள வடிவமைப்பு மற்றும் கொள்கைகள் ஆகிய ஆறு முக்கிய கருப் பொருள் பகுதிகளில் கலந்துரையாடல்கள் அமைந் தன.

துணை ஆதாரங்கள் உலகளாவிய கட்டமைப்புகளில் இருந்து பெறப்பட்டன. அதில் **GSMA** மொபைல், பாலின இடைவெளி அறிக்கை 2024, ஐ.நா. மகளிர் **CSW** அறிக்கை 2022, பாலின டிஜிடல் இடைவெளி குறித்த யுனிசெப்பின் இலக்கியம் மற்றும் 2019 இல் வெளியிடப்பட்ட **ITU** உண்மைகள் மற்றும் புள்ளிவிபர அறிக்ககை. குறிப்பிட்ட கொள்கை கட்டமைப் புகளில் இலங்கையின் இணையப் பாதுகாப்புச் சட்டம், பயங் கரவாகதத் தடைச் சட்டம் **(PTA)** 2007 ம் ஆண்டின் கணிணி குற்றச்சாட்டு சட்டம், மற்றும் 2007ம் ஆண்டின் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டம் போன்ற உள்நாட்டுக் கொள்கைக் கட்டமைப்புகளும் துணை ஆதாரங் களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு முறை Methodology

இலங்கையில் டிஜிட்டல் மாற்றம் 1982 களில் ஆரம்பித்து 1990 களின் நடுப்பகுதியில் தொலைத் தொடர்பு தாராள மயமாக்கலுடன் வேகமெடுத்தது (குணவர்த்தன 2017). 2025 ம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் இணையவழி ஊடுருவல் 59.7 வீதமாக இருந்த போது 13.9 மில்லியன் மக்கள் இணையத்தைப் பயன்படுத்தினர் (DataReportal, 2026). இருப்பினும், 30 ஆண்டுகால உள்நாட்டுப் போர், மோசமான உள்கட்டமைப்பு, இராணுவத்தினரின் வருகை, தமிழ் சமூகத்தின் இன ரீதியிலான ஓரங்கட்டல்கள் மற்றும் ஆணாதிக்க கலாசாரம் காரணமாக வட மாகாணத்தில் இந்த வளர்ச்சி சமமாக இல்லை.

ஊலகளாவிய டிஜிட்டல் பாலின பிளவு, குறிப்பாக யுத்த பாதிப்புகளிற்கு உள்ளான பிராந்தியங்களில், குறிப்பிடத் தக்க அளவில் நீடிக்கின்றது.

2022 ஆம் ஆண்டின் நிலவரப்படி குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட (LMICs) நாடுகளில் மொபைல் இணையப் பயன்பாட்டில் 19 வீத பாலின இடைவெளி இருப்பதாகவும், 310 மில்லியனுக்கும் குறைவான பெண்களே இணையத்தில் உள்ளனர் என்றும் GSMA அறிக்கை (2024) தெரிவிக்கின்றது. தெற்காசியாவில் கையடக்க தொலைபேசி வைத்திருப்பதில் பாலின வரம்பு 23 வீதமாக உள்ளது. குறைந்த வருமானம் மற்றும் கிராமப்புற வதிவிடம் போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய பாதிப்புகளின் காரணமாக பெண்கள் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர் நோக்குகின்றனர்.

மேலும் வட மாகாணத்தில் உள்ள டிஜிட்டல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு குறித்த பாலின ரீதியான தரவுகள் இன்மை சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை உருவாக் கத்தை சிக்கலாக்குகின்றது. இந்த அறிக்கை, இக்குறைபாட்டை நிரப்புவதற்காக, கவனம் குழு விவாத (FGD) மூலம் பெறப்பட்ட கருத்துகளை நடைமுறைப்படுத் தக்கூடிய கொள்கை பரிந்துரைகளாக மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.

## முக்கிய கண்டுபிடிப்புகள்

| சவால்கள் உள்ள பகுதி | முக்கிய கண்டுபிடிப்புகள் | அதிகம் பாதிக் கப்படும் குழுக்கள் | பாதிப்பு நிலை |
|---|---|---|---|
| **உட்கட்டமைப்பு மற்றும் சமத்துவம் அற்ற அணுகல்** | குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் நிலவும் கடுமையான நகர்புற – ணகிராமப்புற இணைப்பு இடைவெளி, குறைவான வலையமைப்பு பரம்பல், மற்றும் சாதனங்களின் அதிக விலை போன்றன இவற்றிற்கான அணுகலை மட்டுப்படுத் துகின்றன. சாதனங்களை பகிர்வதனால் தனிமனித அந்தரங் க பாதிப்பு மற்றும் டிஜிட்டல் சுயாட்சியை குறைக்கின்றது. | கிராமப்புறப் பெண்கள், குறைந்த வருமானமுள்ள குடும் பங்கள் | முக்கியமானது |
| **கலாசார விதிமுறைகள் மற்றும் சுய தணிக்கை** | ஆணாதிக்க நடைமுறைகள், சமூக கண்காணிப்பு மற்றும் மத சார்ந்த கண்காணிப்பு ஆகியவை பெண்களின் இணைய வெளிப்பாடும் பங்கேற்பும் கட்டுப்படுத்துகின்றன. இதனால் பெண்கள் பெரும்பாலும் தன்னிச்சையான தணிக்கை (self-censorship) செய்து கொண்டு, இணைய வெளியில் இருந்து விலகிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. | பெண்கள், முஸ்லிம் பெண்கள், LGBTQIA+ சமூகத்தினர | முக்கியமானது |
| **கட்டுப்படான சட்டங்கள் மற்றும் கண்காணிப்பு** | இணையச் சட்டங்கள் மற்றும் கண்காணிப்பு காரணமாக ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் மற்றும்(LGBTQIA+) சமூகங்களிற்கிடையே நிலவும், இந்த சட்டங்களை அமுல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பிக்கையின்மை காரணமாக, கருத்துச் சுதந்திரமும் இணையவழி மக்கள் ஈடுபாடும் தடைப்படுகின்றன | ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள், தமிழ் சமூகங்கள் | முக்கியமானது |
| **இணைய பாதுகாப்பு OGBV** | குறைந்த டிஜிட்டல் பாதுகாப்பு விழிப்புணர்வு, மோசடிகள், போலிக் கணக்குகள், துன்புறுத்தல் மற்றும் இணைய வழி பாலின அடிப்படையிலான வன்முறைகள் போன்றவற் றிற்கு ஆளாகும் அபாயத்தை அதிகரிக்கின்றது. செயற்கை நுண்ணறிவினால் (AI) இயக்கப்படும் துஸ்பிரயோகம் ஒரு வளர்ந்து வரும் அச்சுறுத்தல் ஆகும். | பெண் ஆர்வலர்கள், திருநர், பெண் அரசியல் வாதிகள் | உயர்வானது |
| **டிஜிட்டல் அறிவு மற்றும் தள அணுகல்** | தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் அறிவூட்டல் கருவிகள் தொடர்பான புரிதல் குறைவு, மொழித் தடைகள் மற்றும் அணுக முடியாதளவிலான தள கொள்கைகள் மற்றும் அவற்றின் செலவுகள் போன்றன விலகலை அதிகரிக்கின் றன. | கிராமப்புற பெண்கள், வயது மூத்த பெண் கள், ஆங்கிலம் பேசாதவர்கள் | உயர்வானது |

## கொள்கை இடைவெளி பகுப்பாய்வு

| கொள்கைப் பகுதி | தற்போதுள்ள கட்டமைப்பு | செயற்படுத்தல் இடைவெளி |
|---|---|---|
| **பாலின பதிலளிப்பு டிஜிட்டல் கையாளுகை** | தேசிய டிஜிட்டல் கொள்கை GovTech Sri Lanka ஆணை | பிரிக்கப்பட்ட பாலின டிஜிட்டல் தரவுகள் இல்லை ICT கொள்கை வடிவமைப்பில் பாலின் ஒதுக்கீடுகள் இல்லை |
| **இணைய பாதுகாப்பு சட்டம்** | கணினி குற்றங்கள் சட்டம் 2007 இணையவழிப் பாதுகாப்புச் சட்டம் | வரம்பு மீறல் சட்ட பூர்வமான கருத்து வெளிப்பாட் டைக் குற்றமாக்குகின்றது: சிறுபான்மையினர் மீது சமமற்ற தாக்கத்தை ஏற்படுத்துகிறது. |
| **இணையவழிப் பாதுகாப்புபெண்கள்/ LGBTQIA+** | ICCPR சட்டம் 2007 தண்டணைச் சட்டம் | தளத்தில் புகாரளித்தல் மற்றும் குறை தீர்க்கும் வழிமுறைகளில் சிங்களம் மற்றும் தமிழில் புகாரளிப்பதற்கான அணுகல் மற்றும் பதிலளிப்பு தன்மை வரையறுக்கப்பட்டுள்ளது. |
| **டிஜிட்டல் உட்கட்டமைப்பு சமத்துவம்** | e-Sri Lanka Nenasala (அறிவகம்) (தொலைநிலையங்கள்) | வடக்கில் தொலை தொடர்பு நிலையங்கள் பெருமளவில் இல்லை : கிராமப்புற இணைப்பு முதலீடு போதுமானதாக இல்லை. |

| | | |
|---|---|---|
| **டிஜிட்டல் அறிவு மற்றும் கல்வி** | பாடசாலைப் பாடத்திட்டம் (வரையறுக்கப்பட்ட ICT) | இணைய பாதுகாப்பு பாடத் திட்டத்தில் இல்லை. பாலின உணர் திறன் டிஜிட்டல் அறிவு நிகழ்ச்சித் திட்டங்கள் இல்லை. |
| **கொள்கை வடிவமைப்பில் பிரதிநிதித்துவம்** | டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் ICT கொள்கை தயாரிப்புகளில் கலந்தது கொள்ளவில்லை. வட மாகாண பிரதிநிதித்துவம் இல்லை |
| **இணையத்தில் கருத்துச் சுதந்திரம்** | தகவல் அறியும் உரிமைச் சட்டம 2016<br>ICCPR | பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சட்டம் போன்றவை அச்சமூட்டும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தமிழர் நினைவேந் தல் நடவடிக்கைகள் தொடர்ந்து அடக்கப்படுகின்றன |

## பரிந்துரைகள்

- **பாலினப் பொருத்தமான டிஜிட்டல் கொள்கை மற்றும் ஆளுகையை வலுப்படுத்தல்**

  சான்றுகளின் அடிப்படையிலான டிஜிட்டல் கொள்கை உருவாக்கத்தை வலுப்படுத்தவும், குறிப்பாக வட மாகாணத் தில் பெண்கள், இன சிறுபான்மையினர் மற்றும் விளிம்பு நிலை குழுக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய் யவும், இலங்கையின் முன் மொழியப்பட்ட தேசிய தரவுப் பரிமாற்ற (NDX) கட்டமைப்பில் பாலின வாரியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தரவுத் தர நிலைகளை ஒருங்கிணைத்தல்.

- **சமத்துவமான டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் அணுகலை விரிவுபடுத்தல்**

  மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற போதிய சேவை கிடைக்காத மாவட்டங்களில், குறைந்த வருமானம் கொண்ட பெண்களுக்கான உபகரண மானியத் திட்டங்களுடன் மலிவு விலை இணைப்பு, மேம்படுத் தப்பட்ட broadband உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பான சமூக டிஜிட்டல் அணுகல் மையங்களிற்கு முன்னுரிமை அளித்தல்.

- **டிஜிட்டல் அறிவு மற்றும் சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளை மேம்படுத்தல்**

  கிராமப்புற பெண்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் LGBTQIA+ சமூகங்களிற்கு முன்னுரிமை அளித்து, இணையப் பாதுகாப்பு, தனியுரிமை, இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறை (OGBV) மற்றும் பாதுகாப்பான புகாரளிக்கும் வழிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பயனுள்ள மற்றும் முழுமையான சமூக அடிப்படையிலான டிஜிட்டல் அறிவுத் திட்டங்களை விரிவு படுத்துதல்.

- **சட்ட மற்றும் தளப் பொறுப்புக் கூறல் அமைப்புகளைச் சீர்திருத்துதல்**

  கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக, கட்டுப்பாடான டிஜிட்டல் சட்டங்களை மறு ஆய்வு செய்தல், அதே நேரத்தில் சூழலிற்கு ஏற்ற உள்ளூர் மொழி நெறிப்படுத்தலை வலுப்படுத்தவும், புகாரளிக்கும் அமைப்புகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் செயற்திறன் மேம்படுத்தவும், இணையவழித் துன்புறுத்தல், வெறுப்புப் பேச்சு மற்றும் ஆழமான போலி துஷ்பிரயோகம் ஆகியவற்றை கையாளவும் டிஜிட்டல் தளங்களை கட்டாயப்படுத்த வேண்டும்.

- **நீண்டகால ஆராய்ச்சி மற்றும் பரப்புரை உதவிகளில் முதலீடு செய்தல்**

  டிஜிட்டல் விலக்கல், பாலின அடிப்படையிலான வன்முறை (OGBV) மற்றும் உள்ளடக்க ஒடுக்கு முறை குறித்த நீடித்த ஆராய்ச்சி, ஆவணப்படுத்தல் மற்றும் பரப்புரைக்கு ஆதரவளித்தல். அதே நேரத்தில் பரந்த பாலின சமத் துவம், குடிமக்கள் ஈடுபாடு மற்றும் யுத்தயத்திற்கு பிந்திய மீட்புத் திட்டங்களில் டிஜிட்டல் பாதுகாப்பை ஒருங் கிணைத்தல்.

## References


- GSMA (2020). The Mobile Gender Gap Report 2020. London: GSMA.
- GSMA (2024). The Mobile Gender Gap Report 2024 (7th ed.). London: GSMA.
- GSMA (2024). The Mobile Economy 2024. London: GSMA.
- Nalaka Gunawardene (2017). Digital Transformation in Sri Lanka: Opportunities and Challenges in Pursuit of Liberal Policies. Colombo: Friedrich Naumann Foundation for Freedom.
- DataReportal. (2025, November 8). Digital 2026: Sri Lanka. DataReportal. https://datareportal.com/reports/digital-2024-sri-lanka
- Hashtag Generation (2022). Gender and Dissent Report. Colombo: Hashtag Generation.
- International Telecommunication Union (2019). Measuring Digital Development: Facts and Figures 2019. Geneva: ITU.
- Rie Kuroda (2019). Policy Brief: The Digital Gender Gap. Tokyo: W20 Japan.
- Law and Society Trust (2024). Northern FGD Report with LST Key Gaps [Internal project document]. BRIDGE Project. Colombo: Law and Society Trust.
- Law and Society Trust (2024). Identified Gaps [Internal project document]. BRIDGE Project. Colombo: Law and Society Trust.
- Ananya Tyers-Chowdhury & Gina Binder (2021). What We Know About the Gender Digital Divide for Girls: A Literature Review. New York: UNICEF.
- UN Women (2022). Gendered Nature of Digital Inequality: Evidence for Policy Considerations. New York: UN Women.
- Citra Social Innovation Lab. (n.d.). Developing Sri Lanka's national data exchange (NDX). https://www.citralab.lk/work/developing-sri-lankas-national-data-exchange-ndx